போகக்கூடிய நிலையிலே அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே தனிப்பட்ட முறையிலே வயதை கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்குத் தனியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நியதியை இன்றைக்கு இந்த அரசு கையாளவில்லை.

தமிழகத்தில் குழந்தைகளுக்கான நீதி மன்றங்கள்

*வினா எண் 298—திரு. கு. ரமணி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குழந்தைகளின் (Children) நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவை குறித்த விவரங்கள் எண்ணிக்கை என்ன?

(இ) கைது செய்யப்படுகிற, தண்டிக்கப்படுகிற குழந்தைக் குற்றவாளிகளுக்கு சிறை வசதிகள் எவ்வாறு செய்யப் பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை. (இ) தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் காவல் துறையினரால் கைது செய்யப்படும் சிறுவர்கள் முதலில் வரவேற்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ்நாடு அரசின் நேரடி நிர்வாகத்தில் ஒன்பதும், அரசின் நிதி உதவி பெற்று தனியார் மேற்பார்வையில் 6 நிறுவனங்களும் ஆக 15 நிறுவனங்கள் வரவேற்பு இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன. இந்த வரவேற்பு இல்லங்களில் சிறுவர்களுக்குத் தேவையான உணவு, உடை ஆகிய அத்தியாவசிய தேவைகள் அளிக்கப்படுவதுடன், தங்க வசதி, மருத்துவ வசதிகள், உடற்பயிற்சி, பொழுது போக்கு அம்சங்கள் போன்ற எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

1983 பிப்ரவரி 15]

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் ஏராளமான பேர்கள் கைது செய்யப்படுகிறார்கள். கோவை மாவட்டத்திலே தொழிலாளர் போராட்டம் நடந்த போதிலும், மின்சாரத் தொழிலாளர்கள் போராட்டம் நடந்த போதிலும் குடும்பத்தோடு பெண்களும், குழந்தைகளும் 1½ வயது முதல் 13 வயது வரைக்கும் குழந்தைகள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களைக் கொண்டு போய் வைப்பதற்கு தனியார் கட்டிடங்களை வாடகைக் கொடுத்து அதிலே வைத்து, சுகாதாரமில்லாமல், எந்தவிதமான வசதியுமில்லாமல், அவர்கள் போட்டிருந்த துணியைக் கூட துவைத்துப் போட்டுக் கொள்வதற்கு அவர்களுக்கு வசதியில்லாமல், அவர்களை வைத்தபோது நானே அந்தச் சமயத்தில் ஒரு ரிப்போர்ட் கூட அனுப்பியுள்ளேன். அப்படிப்பட்ட குழந்தைகள் குற்றவாளிகள் என்று கருதப்படுவதற்கு ஒன்று, அதற்கு தகுந்த நீதிமன்றமும் மற்ற ஏற்பாடுகள் இருக்க வேண்டும். இல்லை என்றால், அவர்களுக்கு தகுந்த பராமரிப்புக் கொடுப்பதற்கான சகல வசதிகளும் அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 10-00.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சட்டத்தின் கீழ் குற்றம் செய்த சிறுவர்களை விசாரிப்பதற்கென்று கிரிமினல் ப்ரொசீஜர் கோட் திருத்தியமைக்கப்பட்டபோது சென்னையைப் பொறுத்தவரைக்கும் அங்கே மெட்ரோபாலிடென் மாஜிஸ்டிரேட்டும், மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட், செகன்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்ஸ் மற்றும் சீப் ஜுடிசியல் மாஜிஸ்டிரேட்ஸ் ஆகியோரும் குழந்தைகள் சட்டத்தின் கீழ் விசாரணை செய்து அதன் மூலமாக தண்டனை கொடுத்துவருகிறார்கள். குழந்தைகளைக் காவல் துறையினர் கைது செய்து, பிறகு வரவேற்பு இல்லங்களில் வைக்கின்றனர். பிறகு நீதிமன்றங்களுக்குக் கொண்டு போகப்பட்டு, விசாரணை செய்கிறபோது அவர்கள் குற்றவாளிகளா இல்லையா என்பது தெளிவாகப் புலப்பட்டபிறகு, குற்றவாளிகளாக இருந்தால், சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு கல்வியிலிருந்து தொழிற்பயிற்சி வரை எல்லா விதமான சலுகைகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தண்டிக்கப்பட்ட பிறகு சிறைக்கு அனுப்பப்பட்டால், அவர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற வசதியைப் பற்றி நான் கேட்கவில்லை. அவர்களைக் கைது செய்தவுடனேயே கொண்டுபோய் வைக்கிறார்களே அந்த வரவேற்பு இல்லங்கள் இன்றைக்கு நரகத்திற்கு ஒப்ப இருந்து கொண்டு இருக்கின்றன. அங்கே போலீஸ் காவல் நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த குழந்தைகளை விசாரணை முடியும் வரையில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது என்பது ஒன்று. மத்திய சிறையின் சூப்பிரன்டென்ட் அல்லது வேறு ஏதாவது ஜுடிசியல் அதாரிட்டீஸ் கன்ட்ரோலிலே அவர்களை வைத்து தகுந்த பராமரிப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவேற்பு இல்லங்களில் கண் காணிப்பாளர் என்ற அதிகாரி மூலம் பாதுகாக்கப்பட்டு வரு கிறார்கள். வரவேற்பு இல்லங்கள் சரியான முறையில் அமைக் கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி னார்கள். சுகாதாரமான முறையில் இல்லை என்று குறிப்பிட் டார்கள். எந்த வரவேற்பு இல்லத்தில் இத்தகைய நிலை இருக் கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த இல்லத்தை சுகாதாரமான முறையில் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயம் எடுக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இப்படி இருக்கிறது என்று ஸ்பெசிபிக்காகக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கின்ற வரவேற்பு இல்லத்தில் சுகாதார முறைக்கு மாறுபட்டு இருந்தால், கண்டிப்பாக அதைச் சுகாதாரமான முறையில் செயல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

இலங்கை அகதிகளுக்கு வீடு கட்டத் தரும் கடன் தொகை

*வினா எண். 299—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூலநலத் துறை, அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கை அகதிகளுக்கு வீடுகட்ட தரும் நிதியை உயர்த்த மத்திய அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம்எனில் அதன் விவரமென்ன?

(இ) அதனால் எவ்வளவு பேர் பயன் பெறுவார்கள்?